

வேலூர் மாநகரம் வேலப்பாடிபகுதி கழகத்தின் சார்பில் கழக அரசின் சாதனை விளக்க மாபெரும் தி.மு.க. பொதுக் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர், டி.எம். கதிர் ஆனந்த் சிறப்புரை ஆற்றினார்.உடன்மாநகர செயலாளர் ப.கார்த்திகேயன் எம்எல்ஏ, பகுதி செயலாளர் சத்திய மூர்த்தி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் வி.எம்.டி.பாலாஜி, நீதிஎன்ற அருணாசலம், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### தமிழக வரலாற்றில் எந்த முதல்வரும் செய்யாத

# சாதனை திட்டங்களை நான்கு ஆண்டில் முதல்வர் மு.க.ஸ்டாலின் செய்துள்ளார்!

## அமைச்சர் ஐ. பெரியசாமி பெருமிதம்

திண்டுக்கல், மே 14-

தமிழக வரலாற்றில் எந்த முதல்வரும் செய்யாத சாதனை திட்டங்களை நான்கு ஆண்டில் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செயல்படுத்தி உள்ளார் என்று ரெட்டியார்சத்திரம் ஒன்றியம் டி.புதுப்பட்டியில் நடைபெற்ற நாடுபோற்றும் நான்கு ஆண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் ஊரக வளர்ச்சி துறை அமைச்சர் ஐ.பெரியசாமி பெருமிதமாக பேசியதோடு தமிழக முதல்வரின் நான்கு ஆண்டு சாதனை 50 வருடங்களுக்கு தமிழக மக்கள் மனதில் நிலைத்திருக்கும் என்றார்.

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய தி.மு.க. சார்பில், நாடு போற்றும் நான்காண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டம் கன்னிவாடி அருகே உள்ள டி.புதுப்பட்டியில் நடைபெற்றது.

கூட்டத்திற்கு ரெட்டியார்சத்திரம் தெற்கு ஒன்றிய திமுக செயலாளரும், பகுத்தறிவாளரும், முன்னாள் ஒன்றிய பெருந்தலைவருமான ப.க.சிவகுரு சாமி தலைமை தாங்கினார்.

திண்டுக்கல் கிழக்கு மாவட்ட தி.மு.க. பொருளாளர் கு.சத்தியமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்



பினர்கள் ஆத்தூர் நடராஜன், இரா.தண்டபாணி, கன்னிவாடி பேரூர் கழக செயலாளர்கள் இளங்கோவன், முன்னாள் பேரூர் கழக செயலாளர்கள் வழக்கறிஞர் சண்முகம், டி.புதுப்பட்டி கிளை செயலாளர் வ.உதயகுமார், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் தலைமைக் கழக பேச்சாளர்கள் கரூர் மதி என்ற மதிவாணன், வா.ராஜேஸ்வரி ஆகியோர் பேசிய பின்பு நிறைவாக தலைமை உரை ஆற்றிய ஊரக வளர்ச்சித்துறை அமைச்சரும், தி.மு.க. மாநில துணை பொதுச்செயலாளருமான ஐ.பெரியசாமி பேசும் போது :-

தமிழ்நாட்டில் இதுவரை ஒரு கோடியே 16 லட்சம் பேருக்கு மகளிர் உரிமைத் தொகை ரூபாய் 1000 வழங்கப்பட்டு வருகிறது. விடுபட்டவர்களுக்கு விரைவில் மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும். அதற்கான சிறப்பு முகாம் ஜூன் மாதம் முதல் வாரத்தில் நடைபெறும். அனைத்து கிராமங்களிலும் குடி தண்ணீர், சாலை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. முதலமைச்சர் கிராம சாலை திட்டத்தில் 20 ஆயிரம் கிலோ மீட்டருக்கு சாலைகள் அமைக்கப்பட்டுள்ளது. ஆத்தூர் ஒன்றியத்தில் கிராமப்புற மாணவ மாணவிகள் எதிர்கால நலன் கருதி, ரூபாய் 75 கோடி மதிப்பில் அரசு கூட்டுறவு கலை கல்லூரி சீவல்சரகு அருகே அமைக்கப்பட்டுள்ளது. திண்டுக்கல் மாவட்டத்தில், 196 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப் பட்டுள்ளது. புதிதாக மேலும் 1200 குடிநீர் மேல்நிலைத் தொட்டிகள் கட்டப்பட உள்ளது. கடந்த திமுக ஆட்சியில் வழங்கப்பட்ட முதியோர் உதவித்தொகை நிறுத்தப்பட்டவர்களுக்கு மீண்டும் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட உள்ளது. தமிழ்நாட்டில் கலைஞர் கனவு இல்ல திட்டத்தில் முதல் கட்டமாக ஒரு லட்சம் வீடுகள் கட்டி முடிக்கப்பட்டு, இரண்டாம் கட்டமாக மேலும் ஒரு லட்சம் வீடுகள் ஒதுக்கப்பட்டுள்ளது. இதில் ஆத்தூர் ஒன்றியத்தில் மட்டும் 1500 வீடுகள் கட்டப்பட்டுள்ளது.

இந்தியாவிலேயே சிறப்பாக செயல்படும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 8 ஆண்டுகளில் 8 லட்சம் கலைஞர் கனவு இல்ல வீடுகள் கட்ட திட்ட மிட்டுள்ளார்.

ஒரு ரூபாய் செலவில்லாமல் கூட்டுறவுத்துறை, சத்துணவு துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் அரசு வேலை வழங்கப்பட்டு வருகிறது. தமிழக வரலாற்றில் எந்த முதல்வரும் நாங்கள் வணங்கக்கூடிய முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் கூட செயல்படுத்திய சாதனை திட்டங்களை விட நம் முதல்வர் கழகத்தலைவர் தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நான்கு ஆண்டுகள் செயல்படுத்தி உள்ளார்.

அவரின் சாதனைகள் இன்னும் 50 ஆண்டுகள்; தமிழக மக்கள் மனதில் நிலைத்திருக்கும் என்றதோடு வரும் 2026 சட்டப்பேரவை தேர்தலில் திமுக கூட்டணி 234 தொகுதிகளில் வெற்றி பெற்று மீண்டும் தமிழ்நாடு முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் பதவி ஏற்பார் என்றார்.

கூட்டத்தில் பொறியாளர் அணியைச் சேர்ந்த எம்.செந்தில்குமரன், ஒன்றிய துணைச் செயலாளர் பிரபாகரன் பொருளாளர் திருப்பதி, விவசாய அணி அமைப்பாளர் கே.ராமமூர்த்தி, மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி அமைப்பாளர் ஆர்.பார்த்தசாரதி, துணை அமைப்பாளர் ஜே.அருண், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் பா.ராஜேஸ் பெருமாள் கன்னிவாடி பேரூராட்சி மன்ற தலைவர் தனலெட்சுமி சண்முகம், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் ஆரோக்கிய சுதா செல்வி, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் புதுச்சத்திரம் மொர்சி, ராதாதேவி சாமிநாதன், உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நிறைவாக ரெட்டியார் சத்திரம் நிலவள வங்கி முன்னாள் மேலாளர் சக்கரவர்த்தி மணிமாறன் நன்றி கூறினார்.

### ஆம்பூர் நகர தி.மு.க. சார்பில்

# சாதனை விளக்கப் பொதுக்கூட்டம்!

ஆம்பூர், மே 14-

திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் நகர திமுக சார்பில் நாடு போற்றும் "நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு" சாதனை விளக்க பொதுக்கூட்டம் நகர கழகச் செயலாளர், நகரமன்ற துணைத்தலைவர் எம்.ஆர். ஆறுமுகம் தலைமையில் 12.05.2025 மாலை 6.00 மணியளவில் பன்னீர் செல்வம் நகரில் நடைப் பெற்றது. வரவேற்புரை வி.நஜீர் அகமது ஆற்றினார். முன்னிலை மாவட்ட அவைத்தலைவர் ஆர்.எஸ். ஆனந்தன், நகரமன்ற தலைவர் பி.ஏஜாஸ் அகமது, மாதனூர் ஒன்றியக்குழு தலைவர் ப.ச.சுரேஷ்குமார், ஒன்றிய பொறுப்பாளர் ஜி.ராமமூர்த்தி, தலைமை செயற்குழு உறுப்பினர் சாம் செல்லபாண்டியன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் ஷபீர் அகமது, ஜெயபாரதி அறிவழகன், எஸ்.தேவராஜ், எஸ்.ரபீக் அகமது, ஏ.தாஸ், ஜி.வில்வநாதன், எம்.நரேஷ், எம்.சரண்ராஜ், ஏ.வி. அசோக்குமார், அம்சவேணி ஜெயக்குமார் முன்னிலை வகித்தனர். வேலூர் பாராளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த், ஆம்பூர் சட்டமன்ற உறுப்பினர் அ.செ. வில்வநாதன், தலைமை கழக பேச்சாளர்கள் கலைநன்மணி, கவிஞர்ஆ.தே.முருகையன், தொகுதி பார்வையாளர் பி.எஸ்.சீனிவாசன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இக்கூட்டத்தில் மாவட்ட கழக நிர்வாகிகள், நகர கழக நிர்வாகிகள் அனைத்து அணிகளின் அமைப்பாளர், கிளை கழக செயலாளர்கள், கழக தோழர்கள், பொதுமக்கள் பெருமளவில் கலந்துக் கொண்டனர். முடிவில் நகர விவசாய அணி அமைப்பாளர் கே.சுந்தர் நன்றியுரை யாற்றினார்.



விக்கிரவாண்டி சட்டமன்ற தொகுதி, காணை தெற்கு ஒன்றியம், மல்லிகைப்பட்டு ஊராட்சியில் "நாடு போற்றும் நான்காண்டு–தொடரட்டும் இது பல்லாண்டு" கழக சாதனை விளக்கப் பொதுக்கூட்டத்தில் விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர்.பொன் கௌதமசிகாமணி, தலைமை கழக பேச்சாளர்கள் பம்மல் முகமது இப்ராஹிம் மற்றும் அப்துல் வஹாப் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். நிகழ்ச்சியில் மாவட்ட ஊராட்சிக் குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், காணை ஒன்றிய கழக செயலாளர்கள் வழக்கறிஞர் கல்பட்டு V.இராஜா R.முருகன் RP.முருகன், ஒன்றியக் குழு தலைவர் திருமதி. நா.கலைச்செல்வி , பொதுக்குழு உறுப்பினர் காடுவெட்டி ஏழுமலை, மாவட்ட கவுன்சிலர் K.சிவக்குமார், ஒன்றியக் குழு துணைத் தலைவர் D.வீரராகவன் ஒன்றிய நிர்வாகிகள் பழனி, செல்வம், செல்வராஜ், சிவக்குமார், கருணாகரன் , மதன் , புனிதா அய்யனார், ஊராட்சி மன்ற தலைவர் சுந்தரி ரகுராமன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர் அரங்கநாதன், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர் பொன்.கோபு, மாவட்ட மருத்துவர் அணி துணை அமைப்பாளர் சபரிநாதன், மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு அணி துணை அமைப்பாளர் சதீஷ், மாவட்ட நெசவாளர் அணி துணை அமைப்பாளர் சுப்பிரமணியன், ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர்கள் குமரன், மணியரசன், தகவல் தொழில்நுட்ப அணி கதிரவன், பூவராகவன், கிளை கழக செயலாளர்கள் பரசுராமன், கணபதி, கார்த்தி, பழனி, உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உடனிருந்தனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் திமிரி கிழக்கு ஒன்றிய தி.மு.க. சார்பில் வாழைப்பந்தல் கிராமத்தில் சாதனை விளக்கப் பொதுக் கூட்டத்திற்கு ஒன்றிய செயலாளர் ஒன்றிய குழு தலைவர் சீ.அசோக் தலைமையில் எல்.ராஜேந்திரன் மாவட்டப் பிரதிநிதி என்.கருணாநிதி ஒன்றிய நெசவாளர் அணி அமைப்பாளர் வரவேற்றனர் . இதில் சிறப்பு அழைப்பாளராக கைத்தறி மற்றும் துணிநூல்துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி கலந்து கொண்டு அரசின் சாதனைகளை எடுத்துரைத்து பேசினார். நிகழ்ச்சியில் தலைமைக் கழக பேச்சாளர் கழக செய்தி தொடர்பாளர் தடா ஓ.சுந்தரம், மாவட்ட இளைஞர் அணிஜெ.எல். ஈஸ்வரப்பன் எம்எல்ஏ, மாவட்ட அவைத்தலைவர் ஏ.கே.சுந்தரமூர்த்தி திமிரி வடக்கு ஒன்றிய செயலாளர் ஒன்றிய குழு துணை தலைவர் ஜெ.ரமேஷ் தலைமை செயற்குழு உறுப்பினர் கலைமணி, மேற்கு ஒன்றிய செயலாளர் வி.ஜி.ராஜேந்திரன், ஒன்றிய கழக நிர்வாகிகள் பாலி.சுப்பிரமணி வெற்றி வீரன், குப்பன் , அலெக்சாண்டர், சத்தியமூர்த்தி, வேடியப்பன் கருணாநிதி, ராஜேந்திரன் மற்றும் கலவை பேரூர் செயலாளர் சேது ரவி மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் சித்திக் பாஷா மாவட்ட ஓட்டுநர் அணி துணை செயலாளர் ஷேசய்யா மாவட்ட ஊராட்சி குழு உறுப்பினர் சிவகுமார் மற்றும் ஒன்றிய நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர். முடிவில் கிளை செயலாளர் வேல்முருகன் நன்றி கூறினார்.

### 7 நாட்கள் நடைபெறுகிறது! அமைச்சர்கள் பங்கேற்பு!

# ஏற்காடு கோடை விழா - மலர்காட்சி மே 23ல் தொடங்குகிறது!

## அமைச்சர் இரா. இராஜேந்திரன் பேட்டி!

சேலம், மே 14-

48வது ஏற்காடு கோடை விழா மற்றும் மலர்க்காட்சி வரும் 23.05.2025 முதல் 29.05.2025 வரை 7 நாள்கள் நடைபெறவுள்ளது.

கோடைவிழாவை யொட்டி அண்ணா பூங்காவில் 1.50 இலட்சம் மலர்களைக் கொண்டு மலர்க் காட்சி, பழக்கண்காட்சி மற்றும் காய்கறிக் கண் காட்சிகளும் அமைக்கப் படவுள்ளது.



ஏற்காட்டில் கோடை விழா முன்னேற்பாடு பணிகள் குறித்த ஆலோசனைக் கூட்டத்தில் சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் இதனைத் தெரிவித்தார்.

சேலம் மாவட்டம், ஏற்காட்டில் 48வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சி வரும் 23.05.2025 முதல் 29.05.2025 வரை நடைபெறவுள்ளதை யொட்டி, சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் தலைமையில் முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தா தேவி, முன்னிலையில் மாவட்ட ஆட்சியகரத்தில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்குப்பின், சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலுக்கிணங்க, சேலம் மாவட்டம், ஏற்காட்டில் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் ஆண்டுத்தோறும் ஏற்காடு கோடைவிழா மற்றும் மலர்க்காட்சி சிறப்பாக நடத்தப்பட்டு வருகிறது. அந்தவகையில், இந்த ஆண்டு 48வது ஏற்காடு கோடை விழா மற்றும் மலர்க்காட்சி வரும் 23.05.2025, வெள்ளிக்கிழமை அன்று தொடங்கி 29.05.2025, வியாழக்கிழமை வரை 7 நாள்கள் நடைபெறவுள்ளது. சுற்றுலாப் பயணிகள், பொதுமக்கள், குழந்தைகள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரையும் மகிழ்விக்கும் வகையில் இக்கோடை விழா ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

48வது கோடை விழா மற்றும் மலர்க்காட்சி தொடக்க விழாவில் மாண்புமிகு வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் அவர்கள் மற்றும் மாண்புமிகு வனத்துறை அமைச்சர் அவர்கள் ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். இக்கோடைவிழா நடத்துவது தொடர்பான முன்னேற்பாடு பணிகள் குறித்து அனைத்துத்துறை அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் இன்றையதினம் நடத்தப் பட்டுள்ளது.

இந்த ஆண்டு நடத்தப்படவுள்ள ஏற்காடு கோடை விழா சுற்றுலாப் பயணிகளை கவரும் வகையில், தோட்டக்கலைத் துறையின் சார்பில் அண்ணா பூங்காவில் 1.50 இலட்சம் மலர்களைக் கொண்டு மலர்க்காட்சி, பழக்கண்காட்சி மற்றும் காய்கறிக் கண்காட்சிகளும் அமைக்கப்படவுள்ளது. குறிப்பாக, வன விலங்குகளைப் பாதுகாத்து வனத்தை பாதுகாப்போம் என்ற உணர்வை பொதுமக்களிடையே ஏற்படுத்த வேண்டும் என்ற நோக்கில் வன விலங்குகளின் வடிவமைப்புகள், மேட்டூர் அணை உள்ளிட்ட பல்வேறு வடிவமைப்புகள் வண்ண மலர்களைக் கொண்டு அமைக்கப்படவுள்ளது.

மேலும், சுற்றுலாப் பயணிகளை ஈர்க்கும் வகையில் 25,000க்கும் மேற்பட்ட வண்ணமலர் தொட்டிகளைக் கொண்டு மலர்க் காட்சி அமைக்கப்படவுள்ளன. அதேபோன்று, தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளை சுற்றுலாப் பயணிகள் மற்றும் பொதுமக்களுக்கு விளக்கும் வகையில் கண்காட்சி அரங்குகளும் அமைக்கப்படவுள்ளன.

இந்நிகழ்வில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தின் சார்பில் கொழு கொழு குழந்தைகள் போட்டி, பாரம்பரிய உணவுப் போட்டி, மகளிர் திட்டத்தின் சார்பில் கோலப்போட்டி, சுற்றுலாத் துறையின் சார்பில் சுற்றுலா பயணிகளுக்கான படகு போட்டிகள் நடத்தப்படவுள்ளது. கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் செல்லப் பிராணிகள் (நாய்கள்) கண்காட்சி, கலைப் பண்பாட்டுத்துறை மற்றும் சுற்றுலாத்துறை ஒருங்கிணைந்து பல்வேறு கலைநிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது.

மேலும், ஏற்காட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளை மகிழ்விக்கும் வகையில் கோடைவிழா நடைபெறும் அனைத்து நாள்களிலும் இன்னிசை நிகழ்ச்சிகள் மற்றும் வண்ணமிகு கலை நிகழ்ச்சிகள் நடத்தப்படவுள்ளது. இளைஞர்களுக்கான கால்பந்து, கைப்பந்து, கிரிக்கெட், கபாடி, கயறு இழுத்தல், மாரத்தான் உள்ளிட்ட பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடத்திட ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

அதேபோன்று, ஏற்காடு கோடை விழாவை யொட்டி, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சிறப்புப் பேருந்துகள் இயக்கிட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், கோடை விழா நடைபெறும் நாள்களில் கன ரக வாகனங்கள் உள்ளிட்ட 4 சக்கர வாகனங்கள் ஏற்காட்டிற்குச் செல்லும் போது அஸ்தம்பட்டி கோரிமேடு வழியாகவும், கீழே இறங்கும் போது ஏற்காடு - வாழவந்தி - கொட்டச்சேடு குப்பனூர் சாலை வழியாக செல்லும் வகையில் ஒருவழிப் பாதையாக மாற்றும் வகையில் போக்குவரத்து நெரிசல் இல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்கள்.

இக்கூட்டத்தில், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையின் கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) திருமதி நே.பொன்மணி, மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் இளங்கோவன், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், தோட்டக்கலை துணை இயக்குநர் திருமதி.மஞ்சுளா, உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) திருமதி சங்கமித்திரை, மாநகர் நல அலுவலர் மரு.முரளி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் கலந்துகொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம் வல்லம் ஒன்றியம் திருவம்பட்டு ஊராட்சியில் நடைபெற்ற தொழிலாளர் நல வாரியத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்க்கும் சிறப்பு முகாமை முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார். உடன் தமிழ்நாடு உடல் உழைப்பு தொழிலாளர்கள் நலன் மற்றும் சமூக பாதுகாப்பு நல வாரிய உறுப்பினர் செஞ்சி சிவா,ஒன்றிய பெருந்தலைவர் அமுதா ரவிக்குமார் ஆகியோர் உள்ளனர்.




ஆம்பூர் நகர தி.மு.க. சார்பில் நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் பல்லாண்டு சாதனை விளக்க பொதுக்கூட்டத்தில் டி.எம்.கதிர் ஆனந்த் எம்.பி.,பேசினார். உடன் அ.செ.வில்வநாதன் எம்.எல். ஏ., நகர செயலாளர் எம்.ஆர். ஆறுமுகம்,மாவட்ட அவைத் தலைவர் ஆர்.எஸ்.ஆனந்தன் மற்றும் பலர் உள்ளனர்.